"மக்கள் நலமுடன் வாழ எம் தலைவனின் ஆணையில்
மலர்போகும் தமிழீழம் வழிகாட்டும் என் உறுதி கூறுகிறேன்."
- மேஜர். வண்ணன் அல்லது ரசியன்

04-04-1996 அன்று, ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டில் அளவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான சமர் ஒன்றில் வீரச்சாவடைந்த மேஜர் வண்ணன் அல்லது ரசியன் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் ஊடுருவிச் செல்ல முன் தனது பெற்றோருக்கும், போராளியான தனது அக்காவிற்கும் எழுதிய இறுதிக் கடிதம். (அக்காவிற்கான கடிதம் உள்ளே)

மேஜர். வண்ணன் அல்லது ரசியன்
இயற்பெயர்: ராஜரட்ணம் விஜிகரன்
சொந்தஇடம்: வல்லுவத்தை பண்ணாலை , தெல்லிப்பளை
வீரமரணமடைந்த சம்பவம்: யாழ். அளவெட்டி மோதல்
வீரமரணம்: 4 - 4 - 96 பிறந்ததிகதி: 23 - 7 - 75

24-05-95
தமிழீழம்

அன்பின் அம்மா அப்பா அண்ணா கண்ணன் அக்கா அறிவது நீங்கள் நலமுடன் வாழ எம் தலைவனின் ஆணையில் மலரப் போகும் தமிழீழம் வழி காட்டும் என உறுதி கூறுகிறேன்.

அம்மா மேற்படி விசயத்திற்கு நேரடியாகவே வருகின்றேன். அம்மா எங்களது போராட்டம் 30 - 35 வருடங்களாக நடந்து கொண்டு இருக்கிறது. இந்த போராட்டம் எதற்காக நடத்து கொண்டிருக்கிறது என்பது மிக முக்கியமாக தெரிந்து இருக்க வேண்டும். இந்த போராட்டமானது எமது மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இன்று போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டத்திற்கு எமது தலைவர் வழி காட்டிக்கொண்டிருக்கிறார். இந்த வழிகாட்டலின் கீழ் நின்று தமிழீழம் மலரவேண்டும் என்று உறுதியோடு போராடி மடிபவர்கள்தான் இந்த மாவீரர்கள். இந்த மாவீரர்கள் வரிசையிலும் இந்த மக்களின் விடிவிற்காகவும் மடிவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அம்மா இந்த மடல் உங்களுக்கு கிடைத்ததும் நான் வீரச்சாவு அடைத்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகியிருக்கும் என நினைக்கின்றேன். இந்த மடலை வாசித்த பின்பு மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள் என நினைக்கின்றேன்.

அம்மா நீங்கள் எனக்கு செய்யவேண்டியது என்னவென்றால் எமது போராளிகளை ஊக்கப்படுத்தும் முகமாக செயற்படவேண்டும். எமது போராளிகளுக்கு உணவு கொடுக்கவும் உங்களுக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை போராளிகளை நன்கு உபசரிக்கவும். மற்றும் எமது குடும்பம் போராளி குடும்பம் என இயக்கத்திலிருந்து எதையும் எதிர்பார்க்கக்கூடாது. நீங்கள் சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை போராளிகளை சாப்பிட வையுங்கள். அவர்கள் தான் தமிழீழம் பெற்றுத் தரப் போகிறார்கள். அம்மா ஒவ்வொரு தமிழ் மக்களும் தமிழீழத்திற்காண்டி எவ்வளவு கஸ்டம் படிகிறோமோ அவ்வளவு விரைவில் தமிழீழத்தை விரைவில் பெற்றுத் தருவார் எம் தலைவர். தலைவரை நம்புங்கள் நிச்சயம் வெற்றி கிட்டும் இது உறுதியாக கூறுகிறேன்.

அம்மா நான் எல்லோருக்கும் கடிதம் எழுத நேரம் இல்லை. ஆகையால் இதை எல்லோருக்கும் காட்டவும். எல்லோரும் நலமாக வாழவும்.

நன்றி.

வண்ணன் அல்லது ரசியன் (இ.விஜிகரன்)

இல. 210312 , 31-10-1995 பி. ப. 12.02 மணி



24-05-95
தமிழீழம்

அன்பின் அம்மா அப்பா அண்ணா கண்ண
ன் அக்கா அறிவது நீங்கள் நலமுடன் வாழ எம்
தலைவனின் ஆணையில் மலரும் தமிழீழம் வழி
காட்டும் என உறுதி கூறுகிறேன்.
அம்மா மேற்படி விசயத்திற்கு நேரடியாகவே
வருகின்றேன். அம்மா எங்களது போராட்டம் 30-35
வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த போராட்டம்
எதற்காக நடந்து கொண்டிருக்கிறது